டாக்டர். பு.உமாநாத்., இ.ஆ.ப.,
ஆணையர், (பொறுப்பு).
சிறுசேமிப்புத் துறை.

எண்.735, அண்ணா சாலை,
சென்னை 600 002.
நேரடி : 044 - 28518737
நிகரி : 044 - 28527507

34440
Jn(N88)

17/10

<u>ந.மு.கடித எண்: சி1/ 1636 /2020-1 நாள் : 03.10..2020</u>

அன்பார்ந்த திரு கண்ணப்பன்,

12 OCT 2020

பொருள்: சிறுசேமிப்பு - 2020 -21 ஆம் ஆண்டின் உலக சிக்கன நாள் விழா- 30.10.2020 அன்று கொண்டாடுதல் - பள்ளி மாணவ / மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பினை வலியுறுத்தி போட்டிகள் நடத்துதல் - குறித்து.

பார்வை: அரசாணை (வாலாயம்) எண் 556, நிதி (சிறுசேமிப்பு)த் துறை, நாள் 22.09.2020.

*******

பார்வையில் காணும் அரசாணையின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. “**உலக சிக்கன நாள் விழா**”, ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30 ஆம் தேதி இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டும் “உலக சிக்கன நாள்” விழாவை சிறப்பாக கொண்டாடுமாறு அரசு, பார்வையில் காணும் அரசாணையின் வாயிலாக அறிவுறுத்தியுள்ளது.

2.ஒவ்வொரு ஆண்டும் உலக சிக்கன நாளை முன்னிட்டு பள்ளி மாணவ / மாணவியர்களிடையே “சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பிணை” வளர்த்திடும் பொருட்டு, அதன் ஒரு நிகழ்வாக, (1) கட்டுரைப்போட்டி (2) நாடகப்போட்டி (3) நடனப்போட்டி (4) பேச்சுப்போட்டி போன்ற கலை நிகழ்ச்சிகள் மாவட்ட அளவில் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது என்பதை தாங்கள் அறிவீர்கள்,

3, இந்த நிதி ஆண்டான 2020-2021ல் கொரோனா நோய் கிருமி தொற்றின் காரணமாக மாணவர்களின் நலன் கருதியும் சமூக இடைவெளியை பேணிக்காத்திடும் வண்ணம், பள்ளி மாணவர்களிடையே நாடகம் மற்றும் நடனப் போட்டிகளுக்கு பதிலாக உலக சிக்கன நாளை முன்னிட்டு கீழ்கண்ட போட்டிகளை ஆன்லைன் மூலமாகவோ அல்லது சமூக இடைவெளியுடனோ நடத்தலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1, கட்டுரைப் போட்டி
2, கவிதைப் போட்டி
3. சிறுசேமிப்பு குறித்த விழிப்புணர்வு சொற்றொடர்கள்
( Slogans on Small Savings or Quotable words on Small Savings)
4. சிறுசேமிப்பு குறித்த வினாடி வினா/ பேச்சுப் போட்டி

3. எனவே, பார்வையில் காணும் அரசாணையின்படி, நடப்பு நிதியாண்டான 2020-21ல், “உலக சிக்கன நாளை” முன்னிட்டு பள்ளி மாணவ / மாணவியர்களிடையே மேற்காணும் போட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு, மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலும், மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, சென்னையில் நடைபெறும், உலக சிக்கன நாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில், மேற்காணும் கலை நிகழ்ச்சிகள் அனைத்து மாவட்டங்களில் நடத்திட முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்கிடவும், நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4. சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான உலக சிக்கன நாள் விழாவில், சிக்கனம் மற்றும் சேமிப்பினை வலியுறுத்தும் வண்ணம் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தி தந்திடவும், முதன்மை கல்வி அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலர் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அளவில் முதல் மூன்று மாணவ / மாணவியர்களுக்கு, உலக சிக்கன நாளான 30.10.2020 அன்றோ அல்லது ஊரடங்கு மற்றும் கொரோனா நோய் கிருமி தொற்றின் காரணமாக மாணவர்களின் நலன் கருதியும் பள்ளிகூடங்கள் மற்றும் ஆசிரியர்களின் வசதி வாய்ப்பினை கருத்தில் கொண்டும், மேற்கண்ட உலக சிக்கன நாளின் நினைவாக அனைவருக்கும் வசதிபடும் பிரிதொரு நாளிலோ பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்படும் எனவும், மாவட்டங்களில், பள்ளி மாணவ / மாணவியர்களிடையே மேற்கண்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்கள் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னையில் மேற்கண்ட நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்கள் பட்டியலை, சென்னை மாநகராட்சி உதவி இயக்குநர் (சிறுசேமிப்பு) அவர்களுக்கும், அனுப்பி வைக்குமாறு, முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிட, நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

4. உலக சிக்கன நாள் 30.10.2020, நிகழ்ச்சி தொடர்பாக மாவட்டங்களில் பணியாற்றும், சிறுசேமிப்பு உதவி இயக்குநர்கள், முதன்மை கல்வி அலுவலரை நேரில் தொடர்பு கொண்டு, இப்பணியை ஒருங்கிணைப்பார்கள் என்றும், அவர்களுக்கு தக்க ஒத்துழைப்பினை நல்கிட, தகுந்த அறிவுரைகள் வழங்குமாறும் தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

நல்வாழ்த்துக்களுடன்,

தங்கள் உண்மையுள்ள,

6/10/20

(பு. உமாநாத்)

பெறுநர்

டாக்டர் S.கண்ணப்பன்,
பள்ளிக் கல்வி இயக்குநர்,
கல்லூரி சாலை, சென்னை - 600006

End.R.C.No.050504/M/S1/2019, Dated:17.10.2020

நகல் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

To
All CEO's

இயக்குநர்
பள்ளிக் கல்வி இயக்ககம்
சென்னை-06

17/10/20